# மே 7 நடப்பு நிகழ்வுகள்

மே 7 - இலக்கியத்துக்கான நோபல் பரிசு வென்ற முதல் ஆசியர் கவிஞர் இரவீந்தரநாத் தாகூர் பிறந்ததினம்

- **பொலிவுரு நகரங்களின்** முதன்மைச் செயல் அதிகாரிகள் பங்கேற்கும் **முதலாவது உச்சி மாநாடு போபாலில்** மே 8,2018 நடைபெற இருக்கிறது
- ***மேற்கு வங்காளம்*** விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் திறப்பு விழாவில் வரும் மே 25-ம் தேதி **வங்காளதேச பிரதமர் ஷேக் ஹசினா** மற்றும் **இந்திய பிரதமர் மோடி** ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.
- **மத்திய பெண்கள் மற்றும் குழந்தை நல அமைச்சகம்** திட்ட ஒப்புதல் வாரிய சந்திப்பின் போது **தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த மையம்** அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- **ஆயுஷ்மான் பாரத் தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டம் -** ஏழை குடும்பங்களுக்கு ஆண்டுக்கு தலா ரூ.5 லட்சம் வீதம் 10 கோடிக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு மருத்துவ காப்பீடு அளிக்கும்
- **தேசிய ஊட்டச்சத்து** இயக்கத்திற்காக **உலக வங்கியிடம் 200 மில்லியன் டாலர்** கடன் பெற ஒப்பந்தம் கையெழுத்து
- **2022ம்** ஆண்டுக்குள் **0-6** வயது வரையிலான குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்தின்மையை **38.4%** இருந்து **25% குறைக்க** இந்தக் கடன் அரசுக்கு உதவும்.

- **ரஷியாவின் அதிபராக நான்காவது முறை** 07.05.2018ல் பதவியேற்று கொண்ட **விளாடிமிர் புதின்.**
- **ரஷியாவின் துணை பிரதமராக** நிதி மந்திரி **அன்ட்டன் சிலுவனாவ்** நியமனம்.
- பிரதமர் **- டிமிட்ரி மெட்வடேவ்**
- இந்தியன் ஆயில் நிறுவனத்தை தொடர்ந்து **வீடுகளுக்கு டீசல் வழங்கும் திட்டத்தை ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (ஹெச்பிசிஎல்)** தொடங்கி இருக்கிறது.
- **அமெரிக்கா**வை சேர்ந்த **இந்திய வம்சாவளி டாக்டர் நீல் மல்கோத்ரா** குழுவினர் **முதன் முறையாக ரோபோ மூலம் தண்டுவட ஆபரேசனை** வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்துள்ளனர்.
- **இஸ்தான்புல் ஓபன் டென்னிஸி**ல் **ஜப்பான் வீரர் டாரோ டேனியல்** வெற்றி பெற்று **முதல் ஏடிபி சாம்பியன் பட்டத்தை** கைப்பற்றினார்.
- ஜெர்மனியில் நடைபெற்ற **முனிச் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஜெர்மனி வீரர் அலெக்ஸாண்டர் ஸ்வரேவ் சாம்பியன்** பட்டம் வென்றார்.